# சட்டவிரோதமாகக் கழிவறையில் புகை பிடித்தல் தொடர்கிறது

கழிவறையில் புகை பிடித்தல் சட்டவிரோதம் என்றாலும் அது இன்னும் பல புகையாளர்களின் விருப்பமான இடமாகத் திகழ்ந்து வருகிறது.

அந்த வகையில் சமீபத்தில் நடந்த கணக்கெடுப்பில் ஐவரில் ஒருவர் கழிவறையில் புகை பிடிப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கழிவறையில் புகை பிடிப்பது வசதி மட்டுமல்ல அது தங்களது நேரத்தையும் சேமிக்கிறது என்றும் புகை பிடிக்கும் சிலர் தெரிவித்து உள்ளனர்.

சிகரெட்டுகளால் எரிந்த வடுகளும் சிகரெட்டு குப்பையும் காப்பிக் கடைகளிலும், கழிவறைகளிலும் அதிகமாகக் காணப்படுகிறது என்றும் தெரிவிக்கப்பட்டது.